The Walt Disney Company

# விநியோகச் சங்கிலியின் நன்னெறி கோட்பாடு

©DISNEY

# முன்னுரை

பல ஆண்டுகளாக, விருந்தினர்கள், பார்வையாளர்கள், நுகர்வோர் மற்றும் பங்குதாரர்களின் நம்பிக்கையை நாங்கள் சம்பாதித்துள்ளோம், நாங்கள் செய்யும் விஷயங்களிலும், நாங்கள் வணிகம் செய்யும் எல்லா இடங்களிலும் உயர் தரநிலைகளைக் கடைப்பிடிக்க அர்ப்பணிப்புடன் செயல்படுவதே இதற்குக் காரணம். நாணயம், நேர்மை, நம்பிக்கை, மரியாதை மற்றும் குழுப்பணி - இவை எங்கள் நிறுவனத்தின் செயல்பாட்டுக் கொள்கைகளை மட்டுமல்லாமல் நாங்கள் எவ்விதம் செயல்படுகிறோம் என்பதையும் பறைசாற்றுகிறது.

Disney நிறுவனமானது வணிகம் செய்து, வளர்ச்சி அடையும் அதே வேளையில், மனித உரிமைகளை மதிக்கவும், நமது கிரகத்தைப் பாதுகாக்கவும், எதிர்கால சந்ததியினருக்குச் சாதகமான சூழலில் பாரம்பரியத்தை வழங்கவும் உறுதி பூண்டுள்ளது. எங்களது விநியோக. சங்கிலியின் நன்னெறி கோட்பாடுகளில், எங்களின் மனித உரிமைகள் கொள்கை மற்றும் சுற்றுச்சூழல் மீது எங்களுக்கு இருக்கும் பொறுப்புகள் போன்ற விஷயங்கள் இடம்பெற்றுள்ளன, அத்துடன் வணிக ரீதியாக எதிர்பார்க்கப்படும் பல்வேறு இதர பொறுப்புகளும் இடம்பெற்றுள்ளன, இவற்றை impact.disney.com என்ற பக்கத்தில் பார்வையிடலாம்.

மனித உரிமைகளுக்கு எதிராக நடக்கும் விஷயங்களை தடுக்கவும், குறைக்கவும் மற்றும் நிவர்த்தி செய்யவும், அத்துடன் எங்களது செயல்பாடுகள், தயாரிப்புகள், சேவைகள் மற்றும் விநியோகச் சங்கிலிகள் சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தும் பாதிப்புகளை குறைக்கவும் உலகம் முழுவதும் உள்ள வினியோகஸ்தர்களிடம் ஒத்துழைப்புடன் செயல்பட விரும்புகிறோம்.

"விநியோகஸ்தர்கள்" என்பது Disney நிறுவனம் பெறும், அங்கீகரிக்கும் அல்லது உரிமம் வழங்கும் பொருட்கள், கூறுகள், தயாரிப்புகள் அல்லது சேவைகள் தொடர்பான உற்பத்தி அல்லது விநியோகத்தில் ஈடுபட்டுள்ள நபரையோ நிறுவனத்தையோ குறிக்கிறது. இத்தகைய தரப்பினர்கள் அனைவரும் மனித உரிமைகளை மதித்து நடக்கும் விஷயங்களில், ஐக்கிய நாடுகளின் Guiding Principles on Business and Human Rights என்பவற்றின் படியும், சர்வதேச தொழிலாளர் அமைப்புகளின் Fundamental Principles and Rights at Work, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் Guidelines for Multinational Enterprises ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடியும் தங்களுக்கு இருக்கும் பொறுப்புகளை உணர்ந்து நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

விநியோகஸ்தர்கள் The Walt Disney Company உடைய விநியோக சங்கிலியின் நன்னெறி கோட்பாட்டிற்கும் (இந்த "கோட்பாடு"), அத்துடன் தயாரிப்புகள், கூறுகள் அல்லது மூலப்பொருட்களின் உற்பத்தி, செயலாக்கம், விலை நிர்ணயம், விற்பனை, ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் விநியோகம் உள்ளிட்டவற்றுடன் தொடர்புடைய அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் இணங்கி நடக்க வேண்டும். இந்த கோட்பாட்டில் உள்ள பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கான அனைத்து குறிப்புகளிலும் உள்ளூர் மற்றும் தேசிய கோட்பாடுகள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள், அத்துடன் பொருந்தக்கூடிய ஒப்பந்தங்கள் மற்றும் தன்னார்வத் தொழில் தரநிலைகள் ஆகியவையும் அடங்கும். உள்ளூர் தொழில் தரநிலைகள் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை விட அதிகமாகவோ அல்லது கடுமையாகவோ இருந்தால், விநியோகஸ்தர்கள் தரநிலைகளில் உயர்வாக உள்ளதையே பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த கோட்பாடானது The Walt Disney Company உடைய பிராண்ட், துணை நிறுவனம் அல்லது இணை நிறுவனத்துடன் தொடர்புடைய அனைத்து விநியோகஸ்தர்களுக்கும் பொருந்தும்.


©DISNEY

# மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள்

## மனித உரிமைகள்

விநியோகஸ்தர்கள் ஐக்கிய நாடுகளின் *Guiding Principles on Business and Human Rights* குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும்; மேலும் அவர்களின் சொந்த செயல்பாடுகள் மூலமாக அல்லது அவர்களின் வணிக தொடர்புகள் மூலம் நேரடியாக தொடர்புடைய செயல்பாடுகள், தயாரிப்புகள் அல்லது சேவைகள் மூலமாக ஏற்படும் அல்லது ஏற்பட சாத்தியமுள்ள மனித உரிமைகளுக்கு எதிரான சம்பவங்களை அடையாளம் காணவும், தடுக்கவும், குறைக்கவும் மற்றும் அதனைப் பொறுப்புடன் நிவர்த்தி செய்யவும் உரியக் கவனத்துடனும் விடா முயற்சியுடனும் செயல்பட வேண்டும்.

## குழந்தை தொழிலாளர்

விநியோகஸ்தர்கள் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த கூடாது. 15 வயதுக்கு உட்பட்டவர்கள், உள்ளூர் சட்டத்தின்படி குறைந்தபட்ச வயது தகுதியை அடையாதவர்கள் அல்லது கட்டாய கல்வியை முடிப்பதற்கான வயதை விடக் குறைவான வயதுடையவர்கள், இதில் எது அதிகமோ அந்த வயது வரம்பிற்கு உட்பட்டவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது.

## கட்டாய உழைப்பு

விநியோகஸ்தர்கள் யாரையும் கட்டாயப்படுத்தியோ வேலை செய்ய விருப்பமில்லாதவரை வற்புறுத்தியோ வேலைக்கு அமர்த்தக் கூடாது. கட்டாய அல்லது விருப்பமில்லாத உழைப்பு என்பது அபராதம் விதிப்பதாக அச்சுறுத்தி அல்லது வற்புறுத்தி ஏதேனும் நபரை வேலை செய்யச் சொல்வதை அல்லது தன்னார்வமற்ற நபரை வேலைக்கு அமர்த்துவதைக் குறிக்கிறது. அடைத்து வைத்து வேலை வாங்குவது, ஒப்பந்தம் அல்லது பத்திரம் போட்டுக்கொண்டு அவற்றைக் காட்டி வேலை வாங்குவது, கட்டாயப்படுத்தி வேலை செய்யச் சொல்வது ஆகியவற்றை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம். பாதிப்பு, ஏமாற்றுதல், நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல், தனிமைப்படுத்துதல், உடல் ரீதியான அல்லது பாலியல் வன்முறை, மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்கள், அடையாள ஆவணங்களை பிணையமாக வைத்துக்கொள்ளுதல், ஊதியம் வழங்காமல் இருத்தல், கடன் கொத்தடிமை (வேலைக்கு அமர்த்துவதற்குக் கட்டணம் பெறுவது அல்லது தவறான வேலையைச் செய்யச் சொல்வது அல்லது மோசமான சூழல்களில் வேலை செய்யச் சொல்வது உட்பட) அல்லது கட்டாயப்படுத்தி கூடுதல் நேரம் வேலை செய்யச் சொல்வது அல்லது அதிகப்படியான நேரம் வேலை செய்யச் சொல்வது போன்ற குற்றச்சாட்டின் கீழ் வேலை வாங்குவதும் கட்டாய உழைப்பில் அடங்கும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் விநியோகஸ்தர்கள், மோசடியான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மூலமாகவோ அல்லது ஆட்சேர்ப்புக் கட்டணங்களை செலுத்தியோ புலம்பெயர்ந்தோர் வேலைக்கு அமர்த்தப்படாததை உறுதி செய்ய வேண்டும்.

## பாகுபாடு

இனம், மதம், நிறம், பாலினம், பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், தேசியம், சமூகம் அல்லது இன தோற்றம், வயது, திருமண நிலை, இராணுவ அல்லது மூத்த நிலை, இயலாமை, கர்ப்பம், தொழிற்சங்க உறுப்பினர், அரசியல் தொடர்பு அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தால் தடைசெய்யப்பட்ட பிற அடிப்படைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சம்பளம், சலுகைகள், பயிற்சி மற்றும் பதவி உயர்வு, ஒழுக்கம், பணிநீக்கம் அல்லது ஓய்வு பெறுதல் உள்ளிட்டவை தொடர்பான பணியமர்த்தல் மற்றும் வேலைவாய்ப்பு நடைமுறைகளில் விநியோகஸ்தர்கள் பாரபட்சம் காட்டக்கூடாது.

## சங்கத்தில் சேரும் சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம் பேசும் சுதந்திரம்

அபராதம், துன்புறுத்தல், பாகுபாடு அல்லது குறுக்கீடு என எதுவும் இல்லாமல், சட்டப்பூர்வமான மற்றும் அமைதியான முறையில் கூட்டுப் பேரத்தில் சேருவது, இணைவது, ஏற்பாடு செய்வது அல்லது பங்கேற்பது குறித்து தேர்ந்தெடுப்பதற்கு தொழிலாளர்களுக்கு உரிமைகள் இருப்பதை விநியோகஸ்தர்கள் மதிக்க வேண்டும். தொழிலாளர்கள் தங்கள் பணியிடத்தில் பிரதிநிதித்துவ செயல்பாடுகளை மேற்கொள்ள விநியோகஸ்தர்கள் அனுமதிக்க வேண்டும்.

## துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம்

விநியோகஸ்தர்கள் ஒவ்வொரு தொழிலாளியையும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும்; உடல் ரீதியான தண்டனை வழங்கக்கூடாது, வன்முறை அச்சுறுத்தல்கள் செய்யக்கூடாது அல்லது உடல், பாலியல், உளவியல் அல்லது வாய்மொழி ரீதியாகப் பிற வகையில் துன்புறுத்தவோ துஷ்பிரயோகம் செய்யவோ கூடாது. பெண்கள், இளைய தொழிலாளர்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் பழங்குடியினர் உள்ளிட்ட பாதிக்கப்பட வாய்ப்புள்ள குழுக்களுக்குச் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம்

விநியோகஸ்தர்கள் ஒவ்வொரு தொழிலாளியையும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும்; உடல் ரீதியான தண்டனை வழங்கக்கூடாது, வன்முறை அச்சுறுத்தல்கள் செய்யக்கூடாது அல்லது உடல், பாலியல், உளவியல் அல்லது வாய்மொழி ரீதியாகப் பிற வகையில் துன்புறுத்தவோ துஷ்பிரயோகம் செய்யவோ கூடாது. பெண்கள், இளைய தொழிலாளர்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் பழங்குடியினர் உள்ளிட்ட பாதிக்கப்பட வாய்ப்புள்ள குழுக்களுக்குச் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.


©DISNEY

# மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள்

## ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

விநியோகஸ்தர்கள் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை வழங்க வேண்டும், அவர்கள் வேலை செய்யும்போது ஏற்பட வாய்ப்புள்ள காயங்கள் அல்லது விபத்துகளைத் தடுக்க அல்லது தணிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும், அத்துடன் முறையான இரசாயன மேலாண்மை மற்றும் அதனை அப்புறப்படுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்க வேண்டும். குறைந்த பட்சம், விநியோகஸ்தர்கள் தொழிலாளர்களுக்குக் கழிவறைகள், குடிநீர், சுகாதாரமான முறையில் உணவு தயாரித்தல், அதனைச் சேமித்தல் மற்றும் உண்ணும் வசதிகள், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள், பாதுகாப்பான இயந்திரங்கள் மற்றும் கருவிகள், விபத்துகளைத் தடுப்பதற்கான மற்றும் குறைப்பதற்கான பயிற்சி, வெப்பநிலை கட்டுப்பாடு, காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் ஆகியவற்றை போதுமான அளவிலும் அணுகக்கூடிய வகையிலும் வழங்கிட வேண்டும்.

புழங்கும் மற்றும் தங்குமிடங்கள் சுத்தமாகவும், பாதுகாப்பாகவும், அந்தந்த நோக்கத்திற்கு ஏற்றதாகவும் இருப்பதை விநியோகஸ்தர்கள் உறுதி செய்ய வேண்டும். இடங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும், மேலும் உள்நுழையவும் வெளியேறவும் நடமாடவும் போதுமான இடம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தொழிலாளர்களுக்குப் புரியும் வகையில் அவசரக்கால தயார்நிலை திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை விநியோகஸ்தர்கள் உருவாக்கி, பராமரித்து, அதனைச் செயல்படுத்திட வேண்டும் மேலும் பல்வேறு விதமான அவசரகால சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் அவர்களிடம் தெளிவாக தெரியப்படுத்திட வேண்டும், இத்தகைய அவசரக்கால சூழ்நிலைகளில் தீ விபத்து, இயற்கை பேரழிவுகள், பாதுகாப்பு மற்றும் உடல்நலம் தொடர்பான சம்பவங்களும் அடங்கும். கட்டமைப்பு ரீதியாகக் கட்டிடங்கள் உறுதியாக உள்ளதா என்பதை விநியோகஸ்தர்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

## ஊதியங்கள் மற்றும் சலுகைகள்

பொருந்தக்கூடிய ஊதியம் மற்றும் சலுகைகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் அனைத்துக்கும் விநியோகஸ்தர்கள் இணங்கி நடக்க வேண்டும், இதில் குறைந்தபட்ச ஊதியங்கள், கூடுதல் வேலைநேரம், சிறுசிறு வேலைக்கான ஊதியங்கள் மற்றும் இழப்பீட்டின் பிற கூறுகள் ஆகியவை தொடர்பான சட்டங்களும் விதிமுறைகளும் அடங்கும்.

சட்டம் அறிவுறுத்தும் வகையில் கட்டண விகிதத்தில் அல்லது சட்டப்பூர்வமாகப் பரிந்துரைக்கப்பட்ட பிரீமிய விகிதம் இல்லை என்றால், வழக்கமான மணிநேரத்திற்கான ஈடான விகிதத்தை விட அதிகமான விகிதத்தில் தொழிலாளர்கள் செய்யும் கூடுதல் நேர வேலைகளுக்கு ஈடு வழங்கப்படுவதை விநியோகஸ்தர்கள் உறுதி செய்ய வேண்டும்.

ஊதியத்தில் பிடித்தம் செய்து கொள்வது அல்லது கழித்துக் கொள்வது சட்டப்பூர்வமாக இருக்க வேண்டும், அவை குறித்து தொழிலாளர்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும் மேலும் இவற்றைத் தண்டனையின் வடிவமாகவோ அல்லது தொழிலாளர்களின் உரிமைகளைத் தடுக்கும் விதமாகவோ பயன்படுத்தக்கூடாது.

குடும்ப விடுப்பு, உடல்நலக்குறைவு, சுகாதாரம், விடுமுறை மற்றும் வேலையின்மை உள்ளிட்ட விஷயங்கள் தொடர்பாகச் சட்டம் கோரும் அனைத்து சலுகைகளும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதை விநியோகஸ்தர்கள் உறுதி செய்ய வேண்டும். துல்லியமான முறையில், சரியான நேரத்தில் மற்றும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் பணியமர்த்துபவரின் பங்களிப்புகள் செலுத்தப்படுவதை விநியோகஸ்தர்கள் உறுதி செய்ய வேண்டும்.


©DISNEY

# மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள்

## வேலை நேரங்கள்

பொருந்தக்கூடிய அனைத்து வேலை நேரச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு விநியோகஸ்தர்கள் இணங்கி நடக்க வேண்டும் மேலும் வழக்கமான வேலை நேரங்கள் வாரத்திற்கு 48 மணிநேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும், விதிவிலக்கான சூழலில், கூடுதல் வேலை நேரம் வாரத்திற்கு 12 மணிநேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தொழிலாளர்கள் தொடர்ந்து 6 நாட்கள் வேலை செய்த பிறகு அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு நாள் ஓய்வினை விநியோகஸ்தர்கள் அளிக்க வேண்டும்.

## தொழிலாளர் தகவல்தொடர்புகள் மற்றும் ஈடுபாடு

இந்த கோட்பாட்டில் கூறப்பட்டுள்ள விதிகள் மற்றும் தொழிலாளர்களுக்குச் சட்ட ரீதியாக இருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அதைப் புரிந்து கொள்வதை உறுதிசெய்ய விநியோகஸ்தர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பிரச்சனையை அடையாளம் கண்டு தீர்வு காண்பதற்குத் தொழிலாளர் முனைப்புடன் ஈடுபடும் விதமாக விநியோகஸ்தர்கள் தொழிலாளர்களின் ஈடுபாட்டை எளிதாக்க வேண்டும். விநியோகஸ்தர்கள் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் வழிமுறைகளை ஏற்படுத்திட வேண்டும். குறைந்தபட்சம், வேலை செய்யும் இடத்திலுள்ள பிரச்சனைகளை அடையாளம் காணும் தொழிலாளர்களின் முயற்சிகளில் விநியோகஸ்தர்கள் தலையிடக் கூடாது.


©DISNEY

# சுற்றுச்சூழல்

விநியோகஸ்தர்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையிலும் இயற்கை வளங்களைப் பேணும் வகையிலும் செயல்பட வேண்டும், இதன்படி இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும் கழிவுகளைக் குறைப்பதற்கும் நீடித்திருக்கும் பொருட்கள் மற்றும் உற்பத்தி முறைகளை நாடலாம். மேலும் பசுமை இல்ல வாயு வெளியேற்றம், நீர் பயன்பாடு மற்றும் கழிவு உற்பத்தி மற்றும் மேலாண்மை போன்ற விஷயங்களில் வருடாந்திர சுற்றுச்சூழல் செயல்திறன் பற்றிய பொது அறிக்கை உட்பட சுற்றுச்சூழல் தாக்கங்களை அளவிடுதல், நிர்வகித்தல் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும். சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதற்கான இலக்குகளை நிர்ணயிக்கவும் செயல் திட்டங்களைச் செயல்படுத்தவும் விநியோகஸ்தர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்

# விலங்குகளின் நலன்

விலங்குகளின் நலனில் விநியோகஸ்தர்கள் உள்ளூர் தரநிலைகளுக்கு இணங்கி நடக்க வேண்டும். உள்ளூர் சட்டம் இல்லாத இடங்களில், தயாரிப்புகள், கூறுகள், பொருட்கள் அல்லது சேவைகள் ஆகியவை பெறப்பட்ட விலங்குகளின் சுற்றுச்சூழல், நடத்தை, உடல் மற்றும் மன நலம் போன்ற விஷயங்களில் தர நிலைப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பின் தரநிலைகளைப் பின்பற்றுமாறு விநியோகஸ்தர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.


©DISNEY

# விநியோக சங்கிலி மேலாண்மை

வேலை செய்யும் இடத்தின் சூழலை தொடர்ந்து கண்காணித்து அதிலுள்ள பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய விநியோகஸ்தர்கள் மேலாண்மை அமைப்புகளை ஏற்படுத்திட வேண்டும், இதில் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் பணியாளர்களை பணியமர்த்துதல் மற்றும் வழக்கமான முறையில் மதிப்பாய்வு செய்வது உள்ளிட்டவை அடங்கும்.

விநியோகஸ்தர்கள் தங்கள் விநியோகச் சங்கிலிகள் அனைத்திற்கும் Disney நிறுவனத்தின் எதிர்பார்ப்புகளைத் தெரியப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து பொருட்களையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

விநியோகஸ்தர்கள் தங்களின் விநியோக சங்கிலி முழுவதையும் கண்காணித்து, அவற்றை ஆவணப்படுத்த வேண்டும். இதில் கூறுகள் மற்றும் மூலப் பொருட்கள் அனைத்தும் அடங்கும், மேலும் Disney நிறுவனம் இவற்றைக் கோரினால் விநியோகஸ்தர்கள் அவற்றை வழங்கிட வேண்டும்.

Disney நிறுவனத்துக்குத் தேவைப்படும் சூழலில், Disney நிறுவனத்தையும் அது நியமிக்கும் முகவர்களையும் (மூன்றாம் தரப்பினர் உட்பட) விநியோகஸ்தர்கள் இந்த கோட்பாட்டிற்கு இணங்கி நடப்பதை உறுதிசெய்யக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட விநியோகஸ்தர்கள் அங்கீகரிக்க வேண்டும். விநியோகஸ்தர்கள் இடங்கள், பிற பணியிடங்கள் மற்றும் பணியமர்த்துபவர் வழங்கிய தங்குமிடம் ஆகியவற்றுக்கு அறிவிப்பு இல்லாமல் வந்து நேரடி ஆய்வு செய்வது; வருகை, ஊதிய பட்டியல் மற்றும் இந்த கோட்பாடு தொடர்பான பிற பதிவுகளை மதிப்பாய்வு செய்வது; மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களின்படி அனுமதிக்கப்படுகின்ற இடங்களில் தொழிலாளர்களைத் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்வது ஆகியன இவற்றுள் அடங்கும்.

விநியோகஸ்தர்கள் இந்த கோட்பாட்டிற்கு இணங்கி நடப்பதை நிரூபிக்கத் தேவையான அனைத்து ஆவணங்களையும் பராமரிக்க வேண்டும் மற்றும் அவை அணுகக்கூடியதாக இருக்க வேண்டும் மற்றும் அத்தகைய ஆவணங்கள் துல்லியமாக, அவ்வப்போதைய தகவலுடன் முழுமையாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## ஒப்புதல் இல்லாமல் துணை ஒப்பந்தம் செய்தல்

Disney நிறுவனத்திற்கு தேவைப்படும்போது, விநியோகச் சங்கிலி நிறுவனங்கள் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும், மேலும் அத்தகைய நிறுவனங்களைச் சேர்த்திட விநியோகஸ்தர்கள் Disney நிறுவனத்தின் வெளிப்படையான எழுத்துப்பூர்வ ஒப்புதலைப் பெற வேண்டும்.

நெறிமுறை மற்றும் பொறுப்பான வணிகம்

Disney நிறுவனத்துடனான ஒப்பந்தங்களின் கீழ், பொருந்தக்கூடிய ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் மற்றும் லஞ்ச ஒழிப்புச் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் விநியோகஸ்தர்களின் செயல்திறன் தொடர்பான பிற ஊழல் எதிர்ப்பு அல்லது லஞ்ச எதிர்ப்புக் கடமைகள் அனைத்தையும் விநியோகஸ்தர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

வர்த்தக முத்திரைகள் மற்றும் பதிப்புரிமைகள் உட்பட Disney நிறுவனத்தின் அறிவுசார் சொத்துக்களை Disney நிறுவனத்தின் வெளிப்படையான ஒப்புதலின் பேரில் மட்டுமே விநியோகஸ்தர்கள் பயன்படுத்த வேண்டும்.


©DISNEY

# தரம் மற்றும் பாதுகாப்பு

விநியோகஸ்தர்கள் தரத்தின் மிக உயர்ந்த தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்கவும், உற்பத்தி செய்யவும், செயலாக்கவும் மற்றும் வழங்கவும் வேண்டும்.

விநியோகஸ்தர்கள் தயாரிப்புகளையும் சேவைகளையும் பாதுகாப்பாகவும், நோக்கத்திற்கு ஏற்ற வகையிலும், நல்ல தரத்திலும், வடிவமைப்பு, கட்டுமானம், பொருட்கள் மற்றும் தயாரிப்பு செயல்பாட்டில் குறைபாடுகள் இல்லாத வகையிலும் உருவாக்கி, தயாரித்து, செயலாக்கி, வழங்க வேண்டும். கூடுதலாக, விநியோகஸ்தர்கள் Disney உருவாக்கிய அனைத்து தயாரிப்பு பாதுகாப்பு தரநிலைகளுக்கும் இணங்கியவாறு தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்கி, தயாரித்து, செயலாக்கி, வழங்க வேண்டும். விநியோகச் சங்கிலியைப் பாதுகாப்பாகப் பராமரிப்பது விநியோகஸ்தர்களின் கடமையாகும், இதில் போக்குவரத்து, ஊர்திகள், கிடங்கு, தரகர், ஒருங்கிணைப்பாளர் அல்லது பிற கூறுகள் உள்ளிட்டவை அடங்கும். மேலும் விநியோக சங்கிலி அனைத்திலும் பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை உறுதி செய்வதும் விநியோகஸ்தர்களின் பொறுப்பாகும்.


©DISNEY